**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 46/2018** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : அருவகம் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused present )

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **25.03.2024**

---

**முதல் விசாரணை**:

நான் தற்போது பாலமேடு காவல்நிலையத்தில் முதல்நிலைய காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.02.2018 ம் தேதி காலை 9.00 மணியளவில் நான் உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் முதல் நிலைகாவலராக பணிபுரிந்த போது சார்பு ஆய்வாளர் ராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நானும் தலைமை காவலர் 1800 பாபு காந்தி மற்றும் செல்வகுமார் முதல் நிலை காவலர் ஆகியோர்கள் உசிலம்பட்டி நந்தவனம் தெரு SOR குளியலறை அருகே ரோந்து சென்றபோது அய்யனார் குளத்தை சேர்ந்த சுப்பையா மகன் ராஜ்குமார் என்பவர் எவ்வித அரசு அனுமதியின்றி Top Star பிராந்தி பாட்டில் 180Ml 24 எண்ணத்தை பையில் வைத்திருந்தார். அவரை சோதனையிட்ட போது சோதனை செய்யவிடாமல் தடுத்து மிரட்டினார் பிறகு காரணம் கூறி 09.15 மணியளவில் அவரை கைது செய்து மேற்படி பாட்டில்களை என் முன்னிலையிலும் செல்வகுமார் முன்னிலையிலும் 9.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினர் அத்தாட்சியில் நானும் செல்வகுமாரும் கையொப்பம் செய்தோம். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான்.(**அந்த கையொப்பம் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ) , எதிரியையும் வழக்கு சொத்துகளையும் காவல்நிலையம் கொண்டு வந்து காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்வதற்கு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

அத்தாட்சி தயாரிக்கும்போது புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபட ம் தயார் செய்யவில்லை. சம்பவ இடத்தில் சுமார் அரை மணி நேரம் இருந்திருப்போம். நாங்கள் கைபற்றி மதுபாட்டில்கள் வெளி கடையில் வாங்கலாம் என்றால் சரிதான். புள்ளிவிபர கணக்கிற்காக எனது மேல் அதிகாரி நிலையத்தில வைத்து எதிரி மீது பொய்யான வழக்கு பதிவு செய்து ஆவணங்களை நிலையத்திலே தயாரித்தார் என்றும் அவருக்கு ஆதரவாக நாங்கள் சம்பவ இடம் சென்றதாகவும், சம்பவ இடத்தில் அத்தாட்சி தயாரித்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./Aruvagam
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.